தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

திருவண்ணாமலை – விழுப்புரத்தில் இன்று உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவண்ணாமலை - விழுப்புரத்தில் இன்று உரையாற்றுகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
08.04.2026 (புதன்கிழமை)		
மாலை 4 மணி	திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்)	உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி
மாலை 7 மணி	விழுப்புரம் (பொதுக்கூட்டம்)	திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம்
09.04.2026 (வியாழக்கிழமை)		
மாலை 5 மணி	மறைமலை நகர் (பொதுக்கூட்டம்)	செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம், மதுரவாயல், அம்பத்தூர், ஆலந்தூர், திருபெரும்புதூர், காஞ்சிபுரம்

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 05.04.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

நாகை மாவட்டம், நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா நாகை கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலர் கோட்டாட்சியர் சங்கரநாராயணனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட துவாக்குடி நகராட்சியில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர், அமைச்சர், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். நகராட்சியின் 16வது வார்டு முதல் 21வது வார்டு வரை உள்ள பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று மக்களிடம் ஆதரவு திரட்டினார். இந்த நிகழ்வின் போது துவாக்குடி நகரச் செயலாளர் காயாம்பு, நகர நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் ஆர்.வைத்திலிங்கம் எம்.எல்.ஏ. ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. பேராவூரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் தி.பழனிவேலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏனாதி.ப.பாலசுப்ரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.